மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2021ம் வருடம் டிசம்பர் மாதம் 16ம் நாள்

ஸ்ரீபிலவ ஆண்டு மார்கழி மாதம் 01ம் நாள்வியாழக்கிழமை

CNR.No. TNMD-19-0000 -2018

**I.A . No. 794/2021**

**in**

**O.S. No. 13/2018**

C. கண்ணுச்சாமி

..... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. சிங்கராயர்
2. சந்தியாகு

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

3. லாரன்ஸ்
4. சந்தனமேரி

.... எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

இம்மனு 26.08.2021ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K. சந்தனக்கருப்புச்சாமி அவர்கள் ஆஜராகியும், 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.C. குருசாமி அவர்கள் ஆஜராகியும், 3,4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரின்மை காரணமாக ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், கடந்த 07.12.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கில் 3,4 எதிர்மனுதாரர்கள்/3,4ம்

உத்தேசதரப்பினர்களை வழக்கு தரப்பினராக சேர்ப்பதற்கு அசல் வழக்கினை திருத்தம் செய்ய அனுமதி கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் சட்டப்பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், அசல் வழக்கானது 1,2 பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தும் மனுதாரர்/வாதியின் அனுபவத்தில் தொடர்ந்து இருந்து வருகின்ற நிலையில், 1,2 பிரதிவாதிகள் 3,4 உத்தேச தரப்பினர்களுடன் கூட்டு சேர்ந்து இடையூறு செய்ததால், அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி 3,4 எதிர்மனுதாரர்கள்/3,4 உத்தேச தரப்பினர்களிடமிருந்து கடந்த 16.06.2016ம் தேதியில் பத்திர பதிவு எண். 1225/2016ன்படி மனுதாரர்/வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், ஆனால் மனுதாரர்/வாதிக்கு கிரையம் செய்து கொடுத்ததற்கு முரணாக 3,4 எதிர்மனுதாராகள்/உத்தேச தரப்பினர்கள் 1,2எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்துக்கொண்டு மனுதாரர்/வாதியின் அனுபவத்தினை இடையூறு செய்ததால் மேற்படி 3,4 எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க அனுமதி கோரி மனு தாக்கல் செய்து அதுவும் இடைக்கால மனு எண். IA.No. 221/2020ன்படி கடந்த 14.04.2021ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே அதன் தொடர்ச்சியாக அசல் வழக்கு பிராதினை திருத்தம் செய்யும் பொருட்டு இந்த நிர் மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், எனவே மனு அனுமதிக்கப்படவேண்டுமென வாதுரைக்கப்பட்டது.

**2) 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்**

மனுவில் கண்டுள்ள விபரங்கள் அனைத்தும் தவறானதாகும். அசல் வழக்கில் 3,4ம் எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்களான லாரன்ஸ் மற்றும் சந்தனமேரி என்பவரை தரப்பினர்களாக சேர்ப்பதற்காக மனுவில் கூறியுள்ள காரணங்கள் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற உட்கருத்துடன் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வீண் மன உளைச்சலை ஏற்படுத்த வேண்டுமென்ற உட்கருத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், உண்மையில் 3,4 எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்களான லாரன்ஸ் ஆகியோர்களுடன் சேர்ந்து மேற்படி மனு தாக்கல் செய்யப்படாமல் ஏற்கனவே 3ம் எதிர்மனுதாரர் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார் என்றும், மேலும் ஏக குடும்பத்தினர்களுக்கு மேற்படி 3ம் பிரதிவாதி லாரன்ஸ் என்பவர் ஏற்கனவே தாவா சொத்தினை பொறுத்து விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ள நிலையில், மேற்படி நபர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும், மேலும் மேற்படி

தாவா சொத்துக்களைப் பொறுத்து 1,2 மற்றும் 4ம் பிரதிவாதிகளுக்கிடையே பாகப்பிரிவினை கோரி மதுரை 1வது சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 1013/2011ன்படி தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வந்ததில் 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் தகப்பனார் அருளானந்தம் என்பவர் தாக்கல் செய்த எதிர்பாத்திய கோரிக்கைக்கு சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே இந்த நிர் மனு செல்லத்தக்கதல்ல என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

<u>**தீர்வு:-**</u>

4) இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கும் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிர் மனுவும் தாவா சொத்தினை இந்த நிர் மனுதாரர்/வாதியானவர், 4ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரிடமிருந்து கடந்த 16.06.2016ம் தேதியில் பதிவு செய்யப்படட்ட கிரைய பத்திரத்தின்படி கிரையம் பெற்றுள்ள நிலையில், மேற்படி 3,4 எதிர்மனுதாரர்கள் மற்ற எதிர்மனுதாரர்களுடன் கூட்டு சேர்ந்து மேற்படி தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தினை இடையூறு செய்ததால், மேற்படி தரப்பினரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க அனுமதி கோரி மனு தாக்கல் செய்து அதுவும் கடந்த 17.04.2021ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட எதிர்வாதத்தின்படி தாவா சொத்தானது ஏற்கனவே 3,4 எதிர்மனுதாரர்களால் ஏற்கனவே விடுதலைப்பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து தொடர்பாக ஏற்கனவே பாகப்பிரிவினை கோரி மதுரை 3வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 1013/2011 வழக்கில் 1,2 பிரதிவாதிகளின் தந்தை அருளானந்தம் என்பவருக்கு ஆதரவாக எதிர்பாத்திய கோரிக்கையின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற பொருண்மையினை அசல் வழக்கு விசாரணையிலே தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இடைக்கால மனு எண். IA. No. 221/2020 மனு அனுமதிக்கப்பட்டு தொடர்ச்சியாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நடவடிக்கையில் அனுமதிக்கப்பட்ட இடைக்கால மனு எண். 221/2020ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித மேல்முறையீடோ சீராய்வு மனுவோ தாக்கல் செய்யப்பட்டதாக எவ்வித எதிர்வாதமும் செய்யப்படவில்லை.

எனவே மேற்கண்ட இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு பொருண்மை மற்றும்

சட்டநிலைப்பாடுகளின்படி மனுதாரர்/வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றே உத்தரவிடப்படுகின்றது.

இறுதியாக, இம்மனு நடவடிக்கையில் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரையம் மற்றும் பொருளாதார விரையத்தினை ஈடு செய்யும் பொருட்டு, மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ரூ.300/- செலவு தொகையாக 22.12.2021க்குள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகின்றது.

செலவு தொகை செலுத்தப்பட்டதை பதிவு செய்வதற்கான அடுத்த கேட்பு நாள்: 22.12.2021.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//